**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தானிய கிடங்குகளுக்கு ரூ.1 லட்சம் கோடி ஒதுக்கீடு

புது தில்லி, மே 31: கூட்டுறவுத் துறையில் 7 கோடி டன் உணவு தானியத்தை சேமிக்கும் வகையில் கிடங்குகளை அமைக்க, ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்தது.

இதுதொடர்பாக தில்லியில் மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வளர்ந்த நாடுகளில் தானிய உற்பத்தியைவிட சேமிப்பு அதிகமாக உள்ளது. ஆனால், இந்தியாவின் தானிய உற்பத்தித் திறன் 31 கோடி டன்களாக இருந்தாலும் சேமிப்புத் திறன் வெறும் 47 சதவீதம்தான்.

இந்நிலையில், அடுத்த 5 ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையில் 7 கோடி டன் தானிய சேமிப்புத் திறனை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப் பெரிய தானிய சேமிப்புத் திட்டமாகும்.

இந்தத் திட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தத் திட்டம் மூலம் தற்போது சுமார் 14.5 கோடி டன்களாக உள்ள நாட்டின் மொத்த தானிய சேமிப்புத் திறன், 21.5 கோடி டன்களாக அதிகரிக்கும்.

சுமார் ரூ.1 லட்சம் கோடி செலவினத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்படும். மத்திய வேளாண்மை அமைச்சகம், உணவு மற்றும் உணவு பதப்படுத்துதல், நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகங்களிடம் உள்ள நிதி திட்டத்துக்குப் பயன்படுத்தப்படும்.

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

> அடுத்த 5 ஆண்டுகளில் 7 கோடி டன் தானிய சேமிப்புத் திறனை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப் பெரிய தானிய சேமிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு வட்டாரத்திலும் 2,000 டன் சேமிப்புத் திறன் கொண்ட கிடங்கு அமைக்கப்படும்.



மத்திய அமைச்சரவை முடிவுகளை விளக்கிய அமைச்சர் அனுராக் தாக்குர்.

இந்த திட்டத்தின்படி, ஒவ்வொரு வட்டாரத்திலும் 2,000 டன் சேமிப்புத் திறன் கொண்ட கிடங்கு அமைக்கப்படும். நாட்டில் ஒரு லட்சம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 63,000 சங்கங்கள் இயங்கி வருகின்றன. உணவு தானிய சேமிப்பில், அந்தச் சங்கங்கள் பலவிதமாகச் செயல்பட முடியும் என்பதால், 2,000 டன் சேமிப்புத் திறன் கிடங்குகள் அமைக்கப்படுவது கூட்டுறவுத் துறையை வலுப்படுத்தும்.

இந்தத் திட்டம் உணவு தானியம் வீணாவதைக் குறைத்து, நாட்டின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தும். விவசாயிகள் தானியங்களை அவசர அவசரமாக விற்பதைத் தடுக்கும். மேலும், கொள்முதல் நிலையங்களுக்கு உணவு தானியங்களைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவு, கிடங்குகளில் இருந்து நியாயவிலைக் கடைகளுக்கு தானியங்களைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவு ஆகியவற்றையும் குறைக்கும். அத்துடன் இந்தத் திட்டம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவும்.

**சிஐடிஐஐஎஸ் 2.0 திட்டத்துக்கு ஒப்புதல்:** புத்தாக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் நிலைத்திருப்பதற்கான நகர முதலீடுகளின் மேம்பட்ட வடிவத்துக்கு (சிஐடிஐஐஎஸ் 2.0) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேலாண்மையை மையமாக கொண்டு, சுழற் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டங்களுக்கு உதவ முற்படுகிறது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற பிரெஞ்சு வளர்ச்சி முகமை மற்றும் ஜெர்மனியின் கேஎஃப்டபிள்யூ வங்கியிடம் இருந்து ரூ.1,760 கோடி கடன், ஐரோப்பிய யூனியனிடம் இருந்து தொழில்நுட்ப உதவித்தொகையாக ரூ.106 கோடி பெறப்படும் என்றார் அனுராக் தாக்குர்.

## 'கூட்டுறவு கடன் சங்கங்கள் வலுப்பெறும்'

உணவு தானிய சேமிப்புத் திறனை அதிகரிக்கும் திட்டம் கூட்டுறவு கடன் சங்கங்களை வலுப்படுத்தும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு: கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப் பெரிய தானிய சேமிப்புத் திட்டத்தை செயல்படுத்த வசதியாக, மத்திய அமைச்சகங்களுக்கு இடையிலான குழுவை (ஐஎம்சி) அமைக்கவும், அந்தக் குழுவுக்கு அதிகாரமளிக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் தலைமையில் அமைக்கப்படும் அந்தக் குழுவில், மத்திய வேளாண்மை, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம், உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர்கள் இடம்பெறுவர்.

கூட்டுறவுத் துறையில் தானிய சேமிப்புத் திட்டம் பன்முகத்தன்மை கொண்டது. நாட்டில் உள்ள வேளாண் விளைபொருள்கள் சேமிப்பு உள்கட்டமைப்புப் பற்றாக்குறையை இந்தத் திட்டம் எதிர்கொள்வதுடன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுமதிக்கிறது. மாநில முகமைகள், இந்திய உணவுக் கழகம் ஆகியவற்றின் கொள்முதல் நிலையங்களாக, நியாயவிலைக் கடைகளாக அந்த சங்கங்கள் செயல்பட முடியும். அரசின் முழுமையான அணுகுமுறை மூலம், இந்தத் திட்டம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை வலுப்படுத்தும். இதனால் விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ.3,233 கோடி முதலீடுகள் ஈர்ப்பு; 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு

**சென்னை, மே 31:** சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளில் ரூ.3233 கோடிக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாகவும், 5,000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் சென்னை திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு 9 நாள்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். பயணத்தை முடித்துக்கொண்டு சென்னைக்கு புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் வந்தார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவர் அளித்த பேட்டி: எனது சிங்கப்பூர், ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமைந்தது. உற்பத்தித் துறையில் உலகுக்கே முன்னோடியாக ஜப்பான் விளங்குகிறது. அதே நேரத்தில் ஆசியாவின் மிகப்பெரிய உற்பத்தி மையமாக தமிழகம் உருவெடுக்க வேண்டும் என்பதுதான் திமுக அரசின் குறிக்கோள். இதற்காக தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முன்பு தொழில் துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

குறைந்தபட்சம் ரூ. 3,000 கோடிக்கு முதலீடுகளை ஈர்க்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டோம். அந்த வகையில் தங்கம் தென்னரசு, தற்போதைய தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் தொழில் துறை அலுவலர்களும் முனைப்புடன் செயல்பட்டு பல ஜப்பான் நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி முக்கியத் திட்டமாக ரூ. 1,291 கோடி முதலீட்டில் குளிர்சாதன கருவிகள் உற்பத்தி செய்வதற்காக புதிய தொழிற்சாலை அமைப்பதற்கு மிட்சுபிஷி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்கெனவே சென்னையில் என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின்



சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளில் அரசு முறைப் பயணத்தை முடித்துக் கொண்டு புதன்கிழமை இரவு சென்னை திரும்பியபோது, விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த முதல்வர் ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, பொன்முடி, இ.பெரியசாமி, பி.கே.சேகர்பாபு உள்ளிட்டோர்.

அதையொட்டி ஐபி நிறுவனம் ரூ.312 கோடி, டைசல் நிறுவனம் ரூ.83 கோடி, கியோகுட்டோ நிறுவனம் ரூ.113.9 கோடி, மிட்சுபா இந்தியா ரூ.155 கோடி, கோயீ நிறுவனம் ரூ.200 கோடி, சடோ – ஷோஜி ரூ.200 கோடி, டஃபல் நிறுவனம் ரூ.150 கோடி, ஓம்ரான் ஹெல்த்கேர் ரூ.128 கோடி என மொத்தம் ரூ.3,233 கோடியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

இதன்மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் 5,000-க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். குறு, சிறு, நடுத்தரத் தொழில் மேம்பாட்டுக்கும், தொழிற்கல்வி வளர்ச்சிக்கும், உயர்கல்வி திறன் பயிற்சிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தின் அடுத்தகட்ட தொழில் மேம்பாட்டு வளர்ச்சிக்கும் இந்தத் தொழிற்சாலைகள் தூண்டுகோலாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

இதையொட்டி 2024 ஜனவரியில் 10, 11 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்று சிங்கப்பூர், ஜப்பான் நாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளேன். அவர்கள் வருவதாக உறுதியளித்துள்ளனர்.

**மேக்கேதாட்டு:** 'மேக்கேதாட்டு அணை விவகாரத்தில் நம்முடைய நிலைப்பாட்டில் உறுதியாக இருப்போம்.

மத்திய பாஜக அரசு வருமான வரித் துறை, சிபிஐ, அமலாக்கத் துறையை பயன்படுத்தி அச்சுறுத்தும் செயல்களில் ஈடுபட்டு வருகிறது. இது பல மாநிலங்களில் நடைபெற்று வருகிறது. தற்போது தமிழகத்தில் தொடங்கியுள்ளது' என்றார் முதல்வர் ஸ்டாலின்.

# இந்திய பொருளாதார வளர்ச்சி 7.2%

**புது தில்லி, மே 31:** இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சி விகிதம் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் 6.1 சதவீதமாக உள்ளது. ஒட்டுமொத்த நிதியாண்டில் (2022-23) இந்த வளர்ச்சி விகிதம் 7.2 சதவீதமாக இருந்ததாக மத்திய அரசு சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

முந்தைய அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலாண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் 4.5 சதவீதமாக இருந்த நிலையில், மார்ச் மாதம் வரையிலான காலாண்டில் 6.1 சதவீதமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

ஒட்டுமொத்த நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சி 7.2 சதவீதமாக உள்ளது. இது 7 சதவீதமாக இருக்கும் என என்எஸ்ஓ கணித்திருந்தது.

முந்தைய 2021-22 நிதியாண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 9.1 சதவீதமாக இருந்தது.

அதே நேரம், சீனாவின் பொருளாதார வளர்ச்சி 2023-ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4.5 சதவீதமாக இருந்தது.

**பிரதமர் மோடி:** இந்திய பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதை வரவேற்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, சர்வதேச சவால்களை எதிர்கொண்டு பொருளாதாரம் மீண்டெழுந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

# போராடும் மல்யுத்த வீரர்கள் மீது நடவடிக்கை: சர்வதேச ஒலிம்பிக் குழு கண்டனம்

**புது தில்லி, மே 31:** இந்திய மல்யுத்த வீரர்கள் மீது தில்லி போலீஸார் தள்ளுமுள்ளு செய்து மேற்கொண்ட கைது நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ள சர்வதேச ஒலிம்பிக் குழு, அவர்களின் குற்றச்சாட்டு குறித்து பாரபட்சமற்ற விசாரணையை விரைந்து நடத்தி முடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

மேலும், இந்திய மல்யுத்த வீரர்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்படுவதை இந்திய ஒலிம்பிக் சங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச ஒலிம்பிக் குழு புதன்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவித்தது.

**அங்கீகாரம் ரத்து செய்யப்படும்:** ஐக்கிய உலக மல்யுத்த கூட்டமைப்பு, 45 நாள்களுக்குள் இந்த விவகாரத்தில் நியாயமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்று செவ்வாய்க்கிழமை எச்சரித்திருந்தது.

மேலும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இந்திய மல்யுத்த வீரர்கள் நடுநிலையான கொடியுடன் பங்கேற்க அனுமதி அளிக்கப்படும் என்றும், தில்லியில் நிகழாண்டு நடைபெறும் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டிகளை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கான ஆலோசனையில் ஈடுபட்டு வருவதாகவும் சுவிட்சர்லாந்தில் இருந்து செயல்படும் இந்தக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

INTERNATIONAL
OLYMPIC
COMMITTEE

பாலியல் புகாருக்கு உள்ளான இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் தலைவரும், பாஜக எம்பியுமான பிரிஜ் பூஷண் சிங்கை கைது செய்யக் கோரியும், 28-ஆம் தேதி தங்கள் மீது போலீஸார் நடத்திய அடக்குமுறையைக் கண்டித்தும் ரியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற சாக்ஷி மாலிக், உலக மல்யுத்தப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற விக்னேஷ் போகாட், ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பஜ்ரங் புனியா ஆகியோர் தங்கள் பதக்கங்களை ஹரித்வார் கங்கையில் வீச செவ்வாய்க்கிழமை சென்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்திய விவசாய சங்கத்தினர் இந்தப் பிரச்னைக்கு ஐந்து நாள்களில் தீர்வு காண்பதாக கூறி பதக்கங்களை வாங்கிச் சென்றனர்.

**இன்று ஆலோசனை:** இந்த விவகாரத்தில் அடுத்தகட்ட முடிவு குறித்து ஆலோசிக்க உத்தர பிரதேச மாநிலம், முசாஃபர் நகரில் விவசாயிகளின் மகா பஞ்சாயத்து கூட்டம் வியாழக்கிழமை நடைபெறும் என்று பல்வேறு மாநில விவசாய சங்கங்களின் கூட்டமைப்பான சம்யுக்த கிசான் மோர்சாவின் தலைவர் நரேஷ் திகேத் அறிவித்துள்ளார்.

**இந்தியா கேட்டில் பாதுகாப்பு:** கங்கையில் பதக்கங்களை வீசச் சென்ற மல்யுத்த வீரர்கள், தில்லி இந்தியா கேட் பகுதியில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில்ஈடுபடப்போவதாக செவ்வாய்க்கிழமை அறிவித்திருந்தனர். இதனால் இந்தியா கேட் பகுதியில் புதன்கிழமை பலத்தபாதுகாப்புபோடப்பட்டிருந்தது. கடந்த ஒரு மாதமாக ஜந்தர் மந்தரில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அவர்கள் புதிய நாடாளுமன்றம் திறக்கப்பட்டவுடன் அங்கு நோக்கி பேரணியாகச் சென்றபோது தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஜந்தர் மந்தரில் அவர்களின் போராட்டப்பகுதியையும்தில்லி போலீஸார் அப்புறப்படுத்தினர்.

**தூக்கில் தொங்கத் தயார்:** இதனிடையே, தன் மீதான குற்றச்சாட்டுகளில் ஒன்றை நிரூபித்தால்கூட தூக்கில் தொங்கிவிடுவேன் என்று பிரிஜ் பூஷண் சிங் கூறினார். அவர் மேலும் கூறுகையில், 'மல்யுத்த வீரர்கள் குழந்தைகளைப் போன்றவர்கள். அவர்களின் வெற்றியில் எனது பங்களிப்பும் உள்ளதால் அவர்கள் மீது குற்றம் சுமத்தமாட்டேன். நான்கு மாதங்களாக அவர்கள் என்னை தூக்கிலிடப்போராடுகிறார்கள். ஆனால், அரசு அதைச் செய்யவில்லை. எனக்கு எதிராக ஆதாரங்கள் இருந்தால் நீதிமன்றத்தில் அளிக்கட்டும். நீதிமன்றம் என்னை தூக்கிலிடட்டும்' என்றார்.

**மத்திய அமைச்சர் வேண்டுகோள்:** விளையாட்டுப் போட்டிகளை தரம் தாழ்த்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம் என்று மல்யுத்த வீரர்களை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் கேட்டுக்கொண்டார்.

இந்த விவகாரத்தில் விசாரணை முடியும் வரையில் அமைதி காக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# கல்பனா சாவ்லா விருது: விண்ணப்பங்கள் வரவேற்பு

**சென்னை, மே 31:** துணிவு மற்றும் வீரசாகச செயல்கள் புரிந்த பெண்ணுக்கான கல்பனா சாவ்லா விருதுக்கு விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைகள் வரவேற்கப்படுவதாக தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட அறிவிப்பு: துணிவு மற்றும் வீர சாகசச் செயல்களுக்கான கல்பனா சாவ்லா விருது ஒவ்வோர் ஆண்டும் முதல்வரால் சுதந்திர தின விழாவின்போது வழங்கப்படுகிறது. இந்த விருதுடன் ரூ.5 லட்சம், சான்றிதழ், பதக்கம் ஆகியவை வழங்கப்படும்.

தமிழகத்தைச் சேர்ந்த துணிச்சலான மற்றும் வீர சாகசச் செயல் புரிந்த பெண் விண்ணப்பதாரர் மட்டுமே இவ்விருதைப் பெறத் தகுதியுள்ளவர். 2023-ஆம் ஆண்டுக்கான துணிவு மற்றும் வீர சாகசச் செயல்களுக்கான கல்பனா சாவ்லா விருதுக்கு பரிந்துரைகள் கோரப்படுகின்றன.

விருதுக்கான விண்ணப்பங்கள் மற்றும் பரிந்துரைகள் இந்த நோக்கத்துக்காக வடிவமைக்கப்பட்ட https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் மட்டுமே பெறப்படும். விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் ஜூன் 30 ஆகும். இணையதளத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# அரசு திட்டங்களை இளைஞர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

## அமைச்சர் தா.மோ.அன்பரசன்



சென்னை கிண்டி சிட்கோ வளாகத்தில் ரூ.100 கோடியில் புதிதாக அறிவிக்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் குறித்த விளக்க கையேட்டை புதன்கிழமை வெளியிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன். உடன் துறை செயலர் வி.அருண் ராய், தொழில் ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், சிட்கோ மேலாண்மை இயக்குநர் எஸ்.மதுமதி, தொழில் வணிக கூடுதல் ஆணையர் கிரேஸ் பச்சோவ், இன்ட்கோசர்வ் முதன்மைச் செயல்அலுவலர் மோனிகா ராணா, தொழில் வணிக கூடுதல் இயக்குநர் ஏகாம்பரம்.

**சென்னை, மே 31:** அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களை இளைஞர்கள், தொழில்முனைவோர் முழுமையாக பயன்படுத்தி தொழில் துறையில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க முன்வர வேண்டும் என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிண்டி சிட்கோ வளாகத்தில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிதாக அறிவிக்கப்பட்ட 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' குறித்த திட்ட விளக்க கையேட்டை அமைச்சர் தா.மோ.அன்பரசன் புதன்கிழமை வெளியிட்டு பேசியதாவது:

'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்' கீழ் புதிய தொழில்முனைவோருக்கும், தொழில் தொடங்கி நடத்தி வருபவர்களுக்கும், தொழிலை விரிவாக்கம் செய்பவர்களுக்கும் 35 சதவீத முதலீட்டு மானியமும், 6 சதவீத வட்டி மானியமும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு கல்வித் தகுதி முழுவதும் விலக்கு அளிக்கப்பட்டதுடன், 55 வயது உள்ளவர்களும் புதிதாக தொழில் தொடங்க முன்வரலாம்.

இத்திட்டத்தின் கீழ், ஆர்வமுள்ள புதிய தொழில்முனைவோர் உற்பத்தி, வணிகம், சேவை சார்ந்த அனைத்துத் தொழில்களுக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும்.

அரசால் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களை, பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள், தொழில்முனைவோர் முழுமையாகப் பயன்படுத்தி தொழில் துறையில் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக கொண்டு வர வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் சிஜி தாமஸ், சிட்கோ மேலாண் இயக்குநர் எஸ். மதுமதி, தொழில் வணிக கூடுதல் ஆணையர் கிரேஸ் பச்சோவ், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியின சங்கத்தினர், தொழில் முனைவோர் கலந்து கொண்டனர்.

Activate Windows
Go to Settings to activate Windows

# தலசீமியா நோயாளிகளுக்கு முதல்வர் காப்பீட்டில் எலும்பு மாற்று சிகிச்சை




சென்னையில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் தலசீமியா பாதிப்புக்கு சிகிச்சை பெற்று மறுவாழ்வு பெற்ற குழந்தைகளுடன் அப்பல்லோ மருத்துவமனை நிர்வாகிகள் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள்.

**சென்னை, மே 31:** தலசீமியா நோயால் பாதிக்கப்பட்ட 165 குழந்தைகள், வளரிளம் பருவத்தினருக்கு முதல்வரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அப்பல்லோ மருத்துவமனையில் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னையில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மருத்துவமனையின் துணைத் தலைவர் பிரீத்தா ரெட்டி மற்றும் புற்றுநோயியல் முதுநிலை மருத்துவர் ரேவதி ராஜ் ஆகியோர் கூறியது:

தலசீமியா என்பது ஒரு மரபணு ரீதியிலான பாதிப்பாகும். இத்தகைய நோய்க்குள்ளான குழந்தைகளின் உடலில் போதுமான ரத்த சிவப்பணுக்கள் உருவாகாது. அதனால் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு ஒரு முறை குருதியேற்ற சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும்.

இதன் காரணமாக உடலில் இரும்புச் சத்து அதிகமாக தேங்கக் கூடும். இது குழந்தையின் வளர்ச்சியை பாதிப்பதுடன், அகச்சுரப்பி பிரச்னைகள், இதய நாள பாதிப்புகள், எலும்பு வலுவிழப்பு பிரச்னைகளுக்கு வழிவகுக்கின்றன. இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 15,000 குழந்தைகள் தலசீமியா பாதிப்புடன் பிறக்கின்றன. எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்பவர்களுக்கு குருதியேற்ற சிகிச்சை தேவைப்படுவதில்லை.

அப்பல்லோ புற்றுநோய் சிகிச்சைமையத்தில் 400-க்கும் மேற்பட்ட தலசீமியா நோயாளிகளுக்கு வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அதில் 40 சதவீதத்துக்கும் அதிகமானோருக்கு முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை வழங்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக 165 பேருக்கு எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை அந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தமிழக மொத்த வாக்காளர்கள் 6.12 கோடி

## வாக்காளர் பட்டியல் காலாண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும்

**சென்னை, மே 31:** வாக்காளர் பட்டியல் காலாண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு அறிவித்தார்.

தமிழகத்தில் 6 கோடியே 12 லட்சத்து 36 ஆயிரத்து 696 வாக்காளர்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

இந்திய தேர்தல் ஆணையம் ஜனவரி 1-இல் மட்டுமல்லாது, ஏப்ரல் 1, ஜூலை 1 மற்றும் அக்டோபர் 1 ஆகிய தொடர்ச்சியான தகுதியேற்பு நாள்களில் இளைஞர்கள் அவர்களது விண்ணப்பங்களை முன்கூட்டியே வழங்க அறிவுறுத்தியுள்ளது. இனி, ஒவ்வொரு காலாண்டிலும் வாக்காளர் பட்டியல் புதுப்பிக்கப்படும். 18 வயது நிறைவடைந்த ஆண்டின் அடுத்த காலாண்டில் தகுதியான இளைஞர்கள் தங்கள் விண்ணப்பங்களை பதிவுசெய்யலாம். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கைக்குப் பிறகு, உரியவருக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படும்.



**1.23 லட்சம் புதிய வாக்காளர்கள்:** 2023 ஏப்ரல் 1-இல் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் அடிப்படையில், இரண்டாம் காலாண்டின்படி வாக்காளர் பட்டியல் புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இதில் புதிய வாக்காளர்களாக 1.23 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். 51,295 பேர் முகவரி மாற்றம் செய்துள்ளனர். 9.11 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் இடப்பெயர்வு, இறப்பு மற்றும் இரட்டைப் பதிவு ஆகிய காரணங்களுக்காக நீக்கப்பட்டுள்ளன. 2.60 லட்சம் வாக்காளர்களின் பதிவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போதைய வாக்காளர் பட்டியலின்படி தமிழகத்தில் 6 கோடியே 12 லட்சத்து 36 ஆயிரத்து 696 வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் 3 கோடியே 1 லட்சத்து,18 ஆயிரத்து 904 ஆண் வாக்காளர்களும், 3 கோடியே 11 லட்சத்து 9 ஆயிரத்து 813 பெண் வாக்காளர்களும் உள்ளனர். மூன்றாம் பாலினத்தவர் 7,979 பேர் உள்ளனர்.

**சோழிங்கநல்லூரில் அதிக வாக்காளர்கள்:** செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் சட்டப்பேரவை தொகுதி தமிழகத்திலேயே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இந்தத் தொகுதியில் மொத்தம் 6.51 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். இதற்கு அடுத்தபடியாக கோவை மாவட்டம், கவுண்டம்பாளையம் சட்டப்பேரவை தொகுதியில் 4.54 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்திலேயே குறைந்த வாக்காளர்கள் கொண்ட தொகுதியாக சென்னை துறைமுகம் தொகுதி உள்ளது. இதில் 1.69 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

**8 லட்சம் இளம் வாக்காளர்கள்:** இந்த வாக்காளர் பட்டியலில் 3,400 வெளிநாடு வாழ் வாக்காளர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. மாற்றுத்திறனாளிகளாக 4.34 லட்சம் வாக்காளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 18-19 வயதுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 8.80 லட்சமாக உள்ளது.

வாக்காளர் பட்டியலை தலைமைத் தேர்தல் அதிகாரியின் https://elections.tn.gov.in/ என்ற வலைதளத்திலும் காணலாம். அதில் வாக்காளர்கள் தங்கள் பெயரை சரிபார்த்துக் கொள்ளலாம். வாக்காளர் பட்டியல் தொடர் திருத்த நடைமுறை தற்போது செயல்பாட்டில் உள்ளது.

2023 ஏப். 1 முதல் 18 வயது நிரம்பிய தகுதியுள்ள நபர்கள் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6-ஐ சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம். https://voters.eci.gov.in/ என்ற வலைதளத்திலும் விண்ணப்பிக்கலாம். கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து Voter Helpline App செயலியை தரவிறக்கம் செய்து அதன் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று கூறியுள்ளார் சத்யபிரத சாகு.

Activate Windows

# கிழக்கு லடாக் எல்லை விவகாரம்: தில்லியில் இந்தியா–சீனா பேச்சு

புது தில்லி, மே 31: கிழக்கு லடாக் பிராந்தியத்தில் மோதல் நிலவும் இந்திய-சீன சர்வதேச எல்லைப் பகுதி சிக்கல்களுக்கு சுமூகத் தீர்வு காண இரு நாட்டின் பிரதிநிதிகள் பங்கேற்ற பேச்சுவார்த்தைக் கூட்டம் தில்லியில் புதன்கிழமை நடைபெற்றது.

பேச்சுவார்த்தையின் முடிவில் எல்லைப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட இரு நாட்டு ராணுவ உயர் அதிகாரிகளுக்கு இடையிலான 19-ஆவது கூட்டத்தை விரைவில் நடத்த இருதரப்பும் ஒப்புக்கொண்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

கிழக்கு லடாக் பிராந்தியத்தில் அமைந்துள்ள இந்திய-சீன சர்வதேச எல்லைப் பகுதிகளில் இரு நாட்டுக்கும் இடையில் நீண்டகாலமாக மோதல் நீடித்து வருகிறது. ராணுவம் மற்றும் அரசு சார்பில் நடத்தப்பட்ட பலதரப்பு பேச்சுவார்த்தைகளால் பல பகுதிகளில் மோதல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், கல்வான் பள்ளத்தாக்கு உள்பட குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் மோதல் தொடர்ந்து வருகிறது.

எல்லை விவகாரத்தில் தீர்வு காண 'இந்திய-சீன எல்லை விவகாரங்கள் பற்றிய ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக்கான செயல் அமைப்பு' மூலம் பல்வேறு பேச்சுவார்த்தைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இறுதியாக, சீன தலைநகர் பெய்ஜிங்கில் கடந்த பிப்ரவரி மாதம் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இந்தச் சூழலில், அமைப்பின் 27-ஆவது பேச்சுவார்த்தை தில்லியில் புதன்கிழமை நடத்தப்பட்டது. இந்தியா சார்பில் கிழக்கு ஆசியாவுக்கான வெளியுறவுத் துறையின் இணைச் செயலரும், சீனா சார்பில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின் எல்லை மற்றும் கடல்சார் விவகாரத் துறை இயக்குநரும் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்திய-சீன எல்லையையொட்டிய கட்டுப்பாட்டு கோட்டின் மேற்கு செக்டாரில் நிலவும் சூழல் குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது. பதற்றம் நிலவும் மற்ற எல்லைப் பகுதிகளிலும் வெளிப்படைத்தன்மையுடன் பேச்சு நடத்தி தீர்வு காண விவாதிக்கப்பட்டது.

அமைதியைத் திருப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்திய-சீன இருதரப்பு உறவை இயல்பாக்குவதற்கான நிலைமையை உருவாக்கும். இந்த நோக்கத்தை அடைவதற்காக தற்போதுள்ள இருதரப்பு ஒப்பந்த நெறிமுறைகளின்படி, ராணுவ உயர் அதிகாரிகளுக்கு இடையிலான 19-ஆவது கூட்டத்தை கூடிய விரைவில் நடத்த ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக ராணுவம் மற்றும் ராஜீய ரீதியில் பேச்சுவார்த்தையைத் தொடர இருதரப்பும் ஒப்புக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு ராணுவ உயர் அதிகாரிகளுக்கு இடையிலான 18-ஆவது கூட்டம் கடந்த ஏப்ரலில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

Thailand Open 2023

# கிரண் ஜார்ஜ் அபார வெற்றி, லக்ஷயா, சாத்வீக்–சிராக் முன்னேற்றம்

**பாங்காக், மே 31:** தாய்லாந்து ஓபன் பாட்மின்டன் சூப்பர் 500 போட்டியில் உலகின் 9–ஆம் நிலை வீரர் சீனாவின் ஷி யுகியை அதிர்ச்சித் தோல்வியடைச் செய்தார் இந்தியாவின் கிரண் ஜார்ஜ். ஏனைய ஆட்டங்களில் அஸ்மிதா, லக்ஷயா சென், சாத்விக்–சிராக் வெற்றிபெற்றனர்.

பாங்காக்கில் புதன்கிழமை நடைபெற்ற இரண்டாம் சுற்று ஆட்டத்தில் ஷி யுகியை 21–18, 22–20 என்ற கேம் கணக்கில் அதிரடியாக வீழ்த்தினார் கிரண் ஜார்ஜ். ஒடிஸா ஓபன் சாம்பியன் ஆன கிரண், தொடக்கம் முதலே ஷி யுகியுக்கு சவாலை ஏற்படுத்தினார்.

லக்ஷயா சென் 21–23, 21–15, 21–15 என்ற கேம் கணக்கில் வாங் ஸு வெயை வீழ்த்தினார். இரட்டையர் பிரிவில் உலகின் நான்காம் நிலை இணையான சாத்வீக்–சிராக் 21–13, 18–21, 21–17 என்ற கேம் கணக்கில் டேனிஷ் இணையை வீழ்த்தினர்.


கிரண் ஜார்ஜ்


லக்ஷயா சென்


அஸ்மிதா

மகளிர் பிரிவில் அஸ்மிதா சாஹ்லியா 17–21, 14–21 என மாளவிகா பன்சோட்டையும், சாய்னா நெவால் 21–13, 21–7 என கனடாவின் வென் யுவையும் வீழ்த்தினர்.

பி. வி. சிந்து , சாய் பிரணீத், பிரியான்ஷு ரஜாவத், சமீர் வர்மா ஆகியோர் தோல்வி கண்டு போட்டியில் இருந்து வெளியேறினர்.

# கொசாவோ மோதல்: படைபலத்தை அதிகரித்தது நேட்டோ

**ஸ்வேசன், மே 31:** கொசாவோவின் ஸ்வேசன் நகரில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள நேட்டோ அமைதிப் படையினர், செர்பிய போராட்டக்காரர்களுடன் மோதல் பதற்றம் அதிகரித்து வருவதையடுத்து படைபலத்தை அதிகரித்துள்ளனர்.

அல்பேனிய இனத்தவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட கொசாவோவில் செர்பிய இனத்தவர் சிறுபான்மையாக இருந்து வருகின்றனர்.

இருந்தாலும், அந்த நாட்டில் செர்பியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்குப் பகுதி நகராட்சிகளுக்கு மே 23-ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலை செர்பியர்கள் புறக்கணித்தனர். அதனையும் மீறி நடைபெற்ற அந்தத் தேர்தலில் வெறும் 3.47 சதவீத வாக்குகளே பதிவாகின.

இருந்தாலும் அந்தத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு, நகராட்சிகள் அல்பேனியர்கள் வசம் வந்தன.

பெரும்பான்மையாக வசிக்கும் தங்களால் புறக்கணிக்கப்பட்ட தேர்தலில் அல்பேனியர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, அவர்கள் மேயர்களாக நியமிக்கப்பட்டதற்கு செர்பியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.



கொசாவோவின் ஸ்வேசன் நகராட்சி கட்டடத்துக்கு எதிரே போராட்டத்தில் புதன்கிழமை ஈடுபட்ட செர்பிய இனத்தவர்கள்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் அதிகரித்ததைத் தொடர்ந்து, அங்கு நேட்டோ அமைதிப் படை கொண்டுவரப்பட்டது.

இந்த நிலையில், சர்ச்சைக்குரிய தேர்தல் நடந்த வடக்குப் பகுதி நகரான ஸ்வேசனின் நகராட்சிக் கட்டடத்தைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான செர்பியர்கள் 3-ஆவது நாளாக புதன்கிழமையும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் அந்த கட்டடத்துக்குள் செல்வதைத் தடுப்பதற்காக நேட்டோ படையினர் தடுப்புகளை அமைத்துள்ளனர்.

ஏற்கெனவே செர்பியர்களுக்கும் நேட்டோ படையினருக்கும் அங்கு திங்கள்கிழமை நடைபெற்ற மோதலில் 30 வீரர்கள் காயமடைந்தனர்.

இந்தச் சூழலில், நகராட்சிக் கட்டடத்தைச் சுற்றிலும் செர்பியர்களின் கூட்டம் அதிகரித்து வருவதால் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நேட்டோ படையின் பலத்தை அதிகரிப்பதற்காக கூடுதலாக 700 வீரர்கள் புதன்கிழமை வரவழைக்கப்பட்டனர்.

### நீண்ட காலப் பகை...

செர்பியர்களுக்கும், கொசாவோவின் பெரும்பான்மை இனத்தவரான அல்பேனியர்களுக்கும் 19-ஆம் நூற்றாண்டிலிருந்தே பகை நீடித்து வருகிறது.




செர்பிய ராஜ்ஜியம் உருவான பிறகு, அந்த ராஜ்ஜியத்துக்கு உட்பட்ட பகுதிகளிலிருந்து அல்பேனியர்கள் கடந்த 1877-78 ஆண்டுகளில் விரட்டியடிக்கப்பட்டனர்.

அதையடுத்து கொசாவோ பகுதியில் குடியேறிய அல்பேனியர்கள், அங்கு வசித்து வந்த செர்பியர்களுக்கு எதிராக படுகொலைகளை நிகழ்த்தினர்.

20-ஆவது நூற்றாண்டிலும் இரு இனத்தவருக்கும் இடையே அவ்வப்போது மோதல்கள் நிகழ்ந்து வந்தன. முதல் பால்கன் போர் (1912-13), முதலாம் உலகப் போர் (1914-18), இரண்டாம் உலகப் போர் (1939-45) காலகட்டத்தில் இந்தப் பகை மோதலாகவும் வன்முறையாகவும் வெடித்தது.

இந்த நிலையில், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவான புதிய சோஷலிச ஆட்சியின்கீழ், ஸ்லோவேனியா, கிரயோஷியா, செர்பியா உள்ளிட்டவை குடியரசுகளாக இருந்தன. செர்பியாவிலும் கொசாவோ பிரதேசத்துக்கு தன்னாட்சி அதிகாரம் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், 1998-99-ஆம் ஆண்டின் செர்பிய போருக்குப் பிறகு கொசாவோ தன்னை தனி நாடாக அறிவித்துக் கொண்டது.

இதனை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டாலும், கொசாவோவை ஒரு தனி நாடாக செர்பியா இது வரை அங்கீகரிக்கவில்லை.

செர்பியாவிலிருந்து பிரிந்து கொசாவா தனி நாடாக இயங்கி வந்தாலும், அங்கு இன்னும் 50,000 செர்பியர்கள் வசித்து வருகின்றனர்; கொசாவோவின் பல்வேறு முக்கிய பொறுப்புகளிலும் அவர்கள் இருந்து வருகின்றனர்.

நாட்டின் வடக்குப் பகுதியிலும், பிற இடங்களிலும் அவர்கள் பெரும்பான்மையாக இருந்து வருகின்றனர்.

இருந்தாலும், அவர்களுக்கும், பெரும்பான்மை அல்பேனியர்களுக்கும் நீறுபூத்த நெருப்பாக பகை தொடர்ந்து வருகிறது.

அண்மைக்கால பதற்றத்துக்கு இதுவே காரணம் என்று கூறப்படுகிறது.

கொசாவோவிலுள்ள சிறுபான்மை செர்பியர்கள் விவகாரத்தில் அந்த நாட்டுக்கும், அண்டை நாடான செர்பியாவுக்கும் இடையே அடிக்கடி போர் பதற்றம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

Activate Windows
Go to Settings to activate Windows.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# வட கொரியாவில் செயற்கைக்கோள் முயற்சி தோல்வி

***சியோல், மே 31:*** தனது செயற்கைக்கோளை விண்வெளியில் செலுத்த வட கொரியா புதன்கிழமை மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

உள்ளூர் நேரப்படி 6.27 மணிக்கு அந்த செயற்கைக்கோளுடன் ஏவப்பட்ட ராக்கெட் கடலில் விழுந்தது. இதற்கிடையே ராக்கெட் ஏவப்பட்ட 14 நிமிஷங்களுக்குப் பிறகு தென் கொரிய தலைநகர் சியோலில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான பகுதிகளில் பதுங்கிக்கொள்ளுமாறு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர். இதனால் அங்கு பீதி ஏற்பட்டது.

வட கொரியா ஏவிய ராக்கெட் ஏவுகணையாக இருக்கலாம் என்ற அச்சத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இருந்தாலும் இந்த அறிவிப்பு பின்னர் விலக்கிக் கொள்ளப்பட்டது.

முன்னதாக, தாங்கள் உருவாக்கியுள்ள உளவு செயற்கைக்கோள் மே 31-ஆம் தேதியிலிருந்து ஜூன் 11-ஆம் தேதிக்குள் விண்ணில் செலுத்தப்படும் என்றும், அதனால் மஞ்சள் கடல், கிழக்கு சீனக் கடலில் ஏதாவது பாதிப்பு ஏற்படலாம் என்றும் ஜப்பான் கடலோரக் காவல் படைக்கு வட கொரியா கடந்த திங்கள்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தது நினைவுகூரத்தக்கது.

EVA STALIN ACADEMY

# 2 சவூதி அரேபியர்களுடன் பூமிக்குத் திரும்பிய ஸ்பேஸ்–எக்ஸ் விண்கலம்



ஸ்பேஸ்–எக்ஸின் டிராகன் விண்கலம்.

**கேப் கனாவெரல், மே 31:** இரு சவூதி அரேபியர்கள் இரு அமெரிக்கர்களுடன் ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பியது.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் 9 நாள் ஆய்வுகளை மேற்கொண்டு வந்த அவர்களுடன் புறப்பட்ட அந்த விண்கலம், 9 மணி நேரத்துக்குப் பிறகு பூமிக்குத் திரும்பி மெக்ஸிகா வளைகுடாவில் பாராசூட் மூலம் செவ்வாய்க்கிழமை இரவு இறங்கியது.

முன்னதாக, ஃப்ளோரிடா மாகாணம், மெரிட் தீவிலுள்ள கென்னடி ஏவுதளத்திலிருந்து ஸ்பேஸ்-எக்ஸ் ஃபால்கன்-9 ராக்கெட் மூலம் செலுத்தப்பட்ட அந்த விண்கலத்தில், நாசாவின் முன்னாள் விண்வெளி வீரர் பெக்கி விட்ஸனுடன் வர்த்தக ரீதியிலான ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்க தொழிலதிபர் ஜான் ஷாஃப்னர், சவூதி அரேபிய விண்வெளி வீரர் அலி அல்-கார்னி, வீராங்கனை ரயானா பர்னாவி ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மே 22-ஆம் தேதி சென்றனர்.

இவர்களில் ரயானா பர்னாவிதான் விண்வெளிக்குச் சென்ற சவூதி அரேபியாவின் முதல் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தென்மாவட்டங்களுக்கு 'வந்தே பாரத்' சாத்தியமா?

மா.மகாராஜன்

**சென்னை, மே 31:** தமிழகத்திலேயே நீண்ட தொலைவு ரயில்பாதையைக்கொண்டுள்ள சென்னை-கன்னியாகுமரி இடையே 'வந்தே பாரத்' ரயில் இயக்க வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்துள்ளது.

இந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கும் அதிவேக ரயிலாக 'வந்தே பாரத்' விளங்குகிறது. முற்றிலுமாக இந்திய தயாரிப்பாக விளங்கும் இந்த ரயில் பெட்டிகள் சென்னை பெரம்பூர் ஐசிஎஃப் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. தென்மாநிலங்களில் முதல் முறையாக சென்னை சென்ட்ரல் - மைசூரு இடையே 11.11.2022-இல் 'வந்தே பாரத்' சேவை தொடங்கப்பட்டது.

இதையடுத்து தமிழகத்தில் மட்டும் இயங்கும் வகையில் சென்னை சென்ட்ரல்- கோவை இடையே 13-ஆவது 'வந்தே பாரத்' ரயிலை கடந்த ஏப். 8-ஆம் தேதி பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

**புறக்கணிக்கப்படும் தென் மாவட்டங்கள்:** சென்னையிலிருந்து மதுரைக்கு பாண்டியன், தேஜஸ், வைகை உள்ளிட்ட விரைவு ரயில்களும், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரிக்கு நெல்லை, முத்துநகர், கன்னியாகுமரி, பொதிகை, அனந்தபுரி விரைவு ரயில்களும் இயக்கப்படுகின்றன.

இந்த ரயில்கள் அனைத்தும் மாலையில் புறப்பட்டு அதிகாலை சென்றடைகின்றன. பகலில் செல்ல நினைப்பவர்கள் தேஜஸ் போன்ற ரயில் மூலம் மதுரை வரை விரைவாகச் சென்றாலும், அங்கிருந்து இணைப்பு ரயில் இல்லாததால் பேருந்து மூலம் தென்மாவட்டங்களுக்குச் செல்லும் நிலை உள்ளது.

சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக்கொண்டால் இப்போது இயக்கப்படும் ரயில்கள் போதுமானதாக இல்லை. இதனால் தென் மாவட்ட மக்கள் பேருந்துகளை அதிக



அளவில் நாடுகின்றனர். இதைப் பயன்படுத்தி பண்டிகை காலங்களில் பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிக்கின்றனர். இதற்கு தீர்வு காணும் வகையில் தென்மாவட்டங்களுக்கு நாட்டின் அதிவேக ரயிலான வந்தே பாரத் ரயிலை இயக்க பயணிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**கன்னியாகுமரிக்கு 'வந்தே பாரத்' ரயில்:** முக்கிய சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு சென்னையிலிருந்து தினமும் ஒரு விரைவு ரயில் இயக்கப்படுகிறது. சுமார் 730 கி.மீ. தொலைவை இந்த ரயில் சுமார் 12 மணி நேரத்தில் கடக்கிறது.

இந்நிலையில், நாட்டின் அதிவேக ரயிலான 'வந்தே பாரத்' ரயில் சென்னை-கன்னியாகுமரி இடையே இயக்கப்படுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. தற்போது வந்தே பாரத் ரயில் இருக்கை வசதியுடன் 700 கி.மீ. தொலைவுக்குள் மட்டும் இயக்கப்படுகிறது. தில்லி-வாராணசி வந்தே பாரத் ரயில் சுமார் 760 கி.மீ தொலைவுக்கு இயக்கப்படுகிறது. குறைவான நிறுத்தங்கள் உள்ளதால் 8 மணி நேரத்துக்குள் இந்தத் தொலைவைக் கடக்கிறது.

சென்னை-கன்னியாகுமரி இடையே வந்தே பாரத் ரயில் இயக்கினால், வழியில் பல முக்கிய நகரங்கள் உள்ளதால் கூடுதல் நேரமாகும். இதை சரிக்கட்ட, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் ஆகிய நகரங்களில், இந்த ரயில் நின்று செல்லலாம். மேலும், நிகழாண்டு இறுதிக்குள் படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில் இயக்கப்படுவதாக ரயில்வே வாரியம் சமீபத்தில் அறிவித்துள்ளது. கூடுதல் தொலைவிலான இந்த வழித்தடத்தில் படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயில் இயக்குமாறு ரயில் பயணிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**ரயில்வேக்கு கூடுதல் லாபம்:** இது குறித்து தென்காசி வாஞ்சி இயக்கத் தலைவர் பி.ராமநாதன் கூறியது: வடக்கே இருந்து திருச்சி, மதுரைக்கு அதிக அளவில் ரயில்கள் இயக்கப்பட்டாலும் தென் மாவட்டங்களுக்கு குறைவான ரயில்களே இயக்கப்படுகின்றன. இதில் மதுரை, திருச்சி பகுதி மக்கள் முன்பதிவு செய்வதால் ரயில்கள் பாதி தொலைவுக்கு காலியாகவும் வருகிறது. இதனால் தென்மாவட்ட மக்களுக்கு ரயில் சேவை எட்டாக்கனியாகவே உள்ளது.

மதுரைக்கு தெற்கே உள்ளவர்கள் பயனடையும் வகையில் சென்னை-கன்னியாகுமரி 'வந்தே பாரத்' ரயில் இயக்க வேண்டும். இந்த ரயிலுக்கு விருதுநகர்-செங்கோட்டை, வாஞ்சி மணியாச்சி-தூத்துக்குடி, திருநெல்வேலி-செங்கோட்டை, திருநெல்வேலி-திருச்செந்தூர் இணைப்பு ரயில்கள் வேண்டும் என்றார் அவர்.

இது குறித்து தெற்கு ரயில்வே ஆலோசனைக் குழு உறுப்பினர் பி.சிம்மசந்திரன் கூறியது: சென்னை-கன்னியாகுமரி இடையே 'வந்தே பாரத்' ரயிலை இயக்க வேண்டும் என்ற கோரிக்கை வரவேற்கத்தக்கது. தமிழகத்தின் நீண்ட தொலைவு பயணமான கன்னியாகுமரிக்கு வந்தே பாரத் இயக்குவதன் மூலம் அதிகம் பேர் பயனடைவர். இதனால் தெற்கு ரயில்வேக்கு கூடுதல் லாபமும் கிடைக்கும். இதைக் கருத்தில் கொண்டு தெற்கு ரயில்வே சார்பில் சென்னை-கன்னியாகுமரி 'வந்தே பாரத்' ரயில் இயக்க வேண்டும் என்றார் அவர்.

**பாதுகாப்பானதா?:** ரயில்வே அதிகாரி ஒருவர் கூறியதாவது: ரயில் போக்குவரத்தின் முக்கிய நோக்கம் பாதுகாப்பாக செல்வதுதான். இதுவரை பாதுகாப்பில் கவனம் செலுத்தி வந்த ரயில்வே வாரியம் தற்போது வேகத்தில் முக்கியத்துவம் செலுத்தியுள்ளது. அதன் வெளிப்பாடே தற்போது இயக்கப்பட்டு வரும் 'வந்தே பாரத்' ரயில். ரயில் எவ்வளவு பாதுகாப்புடன் இருந்தாலும் அது இயக்கப்படும் வழித்தடம் அதற்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும்.

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு தற்போதுதான் இரட்டை ரயில் பாதை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. மேலும், இந்த வழித்தடத்தில் அதிக அளவிலான சிக்னல், ரயில் கிராசிங் இருப்பதால் அதிவேக ரயிலை இந்த வழித்தடத்தில் இயக்குவது ரயில்வே துறைக்கு சவாலானதாக இருக்கும். தற்போது தேஜஸ் ரயில் 110 கி.மீ வேகத்தில் இயக்கப்படுகிறது. இந்நிலையில் 130 கி.மீ வேகத்தில் வந்தே பாரத் ரயிலை இயக்குவதற்கு, பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.